**தலைப்பு -412 வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

-----------------------------------------------------------------------------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

-------------------

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-------------------------------------

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது**.**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்

அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீளாய்வாண்டினுள் ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சு என்பதனால் முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம், ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினம் மற்றும் மானியங்கள் மற்றும் மாற்றீடு செலவினம் முறையாக ரூபா 102,567,947 மற்றும் 545,723 ஆக காணப்பினும், நிதி செயலா்றல் கூற்றில் அம் மீதிகள் முறையாக ரூபா 99,715,555 மற்றும் ரூபா 541,791 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அம் மீதிகளுக்கு இடையில் கூட்டுத்தொகை ரூபா 2,854,324 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | திருத்தப்பட்டு மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதியல்லாச் சொத்து தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு மீதி ரூபா 306,529,798 ஆக காணப்பிடினும், திறைச்சேரி அச்சில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் அம் மீதி ரூபா 308,475,016 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே, அமைச்சின் பரீட்சை மீதியின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,679,199 ஆகவிருந்தது. | மீளாய்வாண்டில் அமைச்சின் செலவு விடயதானங்களில் ஏற்பட்ட வெவ்வேறு மாற்றங்கள் காரணத்தினால் சொத்துக்கள் சரியாக வெவ்வேறாக அடையாளப்படுத்துவதில் சிரமம் காணப்பட்டது. அதனால் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் BOS அறிக்கையில் ஒவ்வொரு உறுப்படி பெறுமதிகளாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. BOS அறிக்கை 2021 ஏப்ரல் CIGAS SUMMARY ஊடாக திருத்தப்படுவதற்கு குறிக்கப்பட்டதுடன் ரூபா 1,697,199 என குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 2020.09.01 – 2020.12.31 வரை காசிற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொத்துக்களாகும். | அமைச்சிற்குரிய சொத்து உறுப்படிகள் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு அச் சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் முற்பண செலுத்தல் ரூபா 2,774,886 காண்பிக்கப்பட்டிருப்பினும் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கட்டுப்பாடு கணக்கு பிரகாரம் காசாக மேற்கொள்ளப்பட்ட செலுத்தல்கள் ரூபா 2,807,661 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் அம் மீதிகள் இடையில் ரூபா 32,775 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | திருத்தப்பட்டு மீள சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | காசுப் பாய்சல் கூற்று சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் பிரகாரம் ஆண்டினுள் செலவு மற்றும் வரவு வைத்தல்கள் முறையாக ரூபா 70,693,549 ஆன தொகை மற்றும் ரூபா 6,723,898 ஆன தொகை ஆக காணப்படினும் முற்பண கட்டுப்பாடு கணக்கின் பிரகாரம் அப் பெறுமதிகள் முறையாக 13,162,216 மற்றும் 16,548,156 ஆக காணப்பட்டது. அவ்வாறே, தனிபட்ட மீதி வகையீட்டு பொழிப்பறிக்கையின் பிரகாரம் ரூபா 26,470 அடையாளப்படுத்தப்படாத வரவு மீதியொன்று சீராக்கி மீளாய்வாண்டு இறுதியில் முற்பண கணக்கில் ரூபா 63,969,651 ஆன மீதி பெறப்பட்டிருந்தது. | திருத்தப்பட்டு மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கிற்குரிய சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.5 கட்டுநிதி மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 பிரகாரம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டி 06 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 488,174,336 ஆன மீதி மற்றும் 4,111 ஆன காசு புத்தக மீதி இடையில் வித்தியாசம் கட்டுநிதி இணக்க கணக்கின் ஊடாக இணக்கம் செய்யப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கையில் மீதி மற்றும் காசு புத்தகத்தின் மீதி கட்டுநிதி இணக்க கணக்கின் ஊடாக இணக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | அரசாங்க நிதி திணைக்கள சுற்றறிக்கை ஆலோசனைக்ளுக்கு அமைவாக நிதிக் கூற்றுக்கள் தாயரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி கூற்றுக்களுக்கு பிரகாரம் திறைச்சேரி கட்டுநிதி மீதி மற்றும் அமைச்சு கட்டுநிதி மீதி இடையில் ரூபா 265,913 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | திருத்தப்பட்டு மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | கட்டுநிதி மீதி திறைச்சேரி அச்சுடன் இணக்கம் செய்து அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

1.6.6 **பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சினால் நிதி பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனம் நிரற்படுத்தும் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிராததுடன் பௌதீக ரீதியாக மற்றும் கணனிமயமாக்கப்பட்டு பேணிச் சென்றிருந்த பதிவேடுகளில் அமைச்சிற்குரிய வாகனங்களின் சரியான தரவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதிருந்து அமைச்சின் வாகன பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதென. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்கள் நிரற்படுத்தும் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமைச்சின் செலவிற்காக ரூபா 200,167,000 ஆன கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் ரூபா 211,836,000 ஆன கட்டுநிதியொன்று திறைச்சேரியிடம் கோரப்பட்டதன் காரணத்தினால் திட்டமிடப்பட்ட கட்டுநிதியை மிகைத்து ரூபா 11,669,000 ஆன கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட கட்டுநிதியில் மற்றும் கோரப்பட்ட கட்டுநிதியில் முறையாக 66 சதவீதம் மற்றும் 62 சதவீதம் மட்டும் அமைச்சிற்கு பெறப்பட்டிருந்தது. | கோரப்பட்ட கட்டுநிதி பணம், அம் மாதத்தில் பெறப்படாத விடத்து அக் கட்டுநிதி பணம் அடுத்த மாதம் கோரப்படும். அப்போது கோரப்பட்ட கட்டுநிதி, திட்டமிடப்பட்ட கட்டுநிதியை மிகைத்து செல்ல முடியும். | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு நிதியேற்பாடு பிரகாரம் அமைச்சிற்கு தேவையான கட்டுநிதி முறையாக திட்டமிடப்பட்டு காலக்கிரமத்தில் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 18 செலவு விடயதானங்களுக்குரிய ரூபா 27,450,000 ஆன நிகர நிதியேற்பாட்டில் ரூபா 9,893,789 ஆன தொகை, அதாவது 28 சதவீதம் எஞ்சி காணப்பட்டதுடன் அச் சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயதானங்களுக்குரிய 23 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சிடையில் காணப்பட்டது. மேலும், 8 மூலதன செலவு விடயதானங்களின் ரூபா 4,750,000 ஆன நிகர நிதியேற்பாட்டில் ரூபா 3,831,966 ஆன தொகை, அதாவது 80 சதவீதம் எஞ்சி காணப்பட்டதுடன் அச் சேமிப்பு ஒவ்வொரு செலவு விடயங்களில் 37 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சிடையில் காணப்பட்டது. | அமைச்சின் அறை ஒதுக்கப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்துவதற்கிருந்த பணத்திற்கு பதிலாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களினால் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதப்படுத்தல் போன்ற வெவ்வேறு காரணங்கள் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதற்கு தாக்கமளித்திருந்ததுடன் எதிர்காலத்தில் வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்படும் போது மிகை மதிப்பீடு உள்ளடக்கப்படாதிருப்பதற்கு குறிக்கப்பட்டதென. | தேவை குறித்த பிரகாரம் கணிக்கப்பட்டு வருடாந்த பாதீடு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் 06 செலவு விடயதானங்களுக்காக நிதி பிரமாணம் 66 ஊடாக கூட்டுத்தொகை ரூபா 4,325,000 ஆன பணத்தொகை வேறு செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறே அம் மாற்றல்களினால் மூன்று செலவு விடயதானங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 213,705 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு பொது நிர்வாக மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் ஊடாக இணைப்பு கொடுப்பனவு மாதத்திற்கு 15 நாட்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் அதற்காக கோரிக்கைகள் முன்வைக்கப்படாமை மற்றும் ஏனைய செலவு விடயங்களின் சேமிப்பு 05 சதவீதத்திற்கும் குறைவடைந்தமையென. | நிதியேற்பாடு தேவை குறிப்பாக அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் அத்தியாவசிய செலவுகள் ஏற்றலுக்காக நிதி பிரமாணம் 66 ஊடாக நிதியேற்பாடு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதி பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீடு முழுமையாக மற்றும் சரியாக தயாரிக்கப்படாமை காரணத்தினால் 05 செலவு விடயதானங்களுக்காக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,300,000 இல் கூட்டுத்தொகை ரூபா 1,875,000 ஆன தொகை, அதாவது 81.5 சதவீதம் வேறு செலவு விடயதானங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்குரிய 04 வாக்கு பதிவு கணக்குகள் ஊடாக நிதியேற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தமையினால் நிதியேற்பாடு குறைந்த செலவு விடயங்களுக்கு மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் மிகவும் சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | தேவை சரியாக அடையாளப்படுத்தப்பட்டு வருடாந்த பாதீட்டின் ஊடாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு செலவு செய்தல் முறையாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 712,481 ஆன பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிராததுடன் 3 செலவு விடயங்களுக்குரிய நிதியேற்பாடு மீதியை மிகைத்து ரூபா 1,305,428 ஆன பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. | திருத்தப்பட்டு மீள முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | பொறுப்புக்களுக்கு உட்படும் போது அதற்குரிய நிதி பிரமாண ஏற்பாடுகள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கப்பூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ் அமைப்பின் பயனுறுதித்தன்மை தொடர்பாக உரிய காலத்தில் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அமைப்பு விணைத்திறனாக மேற்கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் | கொவிட் தொற்று நிலையினால் அலுவலக செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படல், திட்டமிடப்பட்டவாறு அந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு தடையாகியது. எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அம் மீளாய்வு எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டமைக்கு அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு பணி முறையாக செயற்படுத்தப்படுவதற்காக வினைத்திறனான முறையொன்று உள்ளமை தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், அறிக்கையின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு பிரகாரம் அத் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமையினால் அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படல் திட்டமிடப்பட்டவாறு உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டங்கள் மெற்கொள்வதற்கு தடையாகக் காணப்பட்டது. | -மேற்படி- |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள | | | |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
| (அ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலல்கள் அமைச்சு சுற்றறிக்கையின் 02 iv ஆம் பந்தி | மீளாய்வாண்டின் மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் ஊடாக வருகை உறுதிப்படுத்தப்படாது மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு ரூபா 306,855 செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமையினால் பதவியணியின் சுகாதார பாதுகாப்பிற்கென எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக விரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்பாடு 2020 மார்ச் 22 திகதி வரை செயற்படுத்தப்படவில்லை. அக் காலப்பகுதியினுள் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்தும் | சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போது வருகை பதிவேடு அடிப்படையாகக் கொள்ளப்பட்டதென | |
| (ஆ) | 1992 ஆகஸ்ட் 03 திகதிய 26/92(2) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களை தவிர மற்றைய வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் அமைச்சின் பெயர் பொதிக்கப்பட வேண்டியிருப்பினும் அமைச்சிற்குரிய 15 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2010 யூலை 09 திகதிய CA/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டில் முதல் இரு மாதங்களினுள் அமைச்சின் செயலாளர்கள் உட்பட மூன்று உத்தியோகத்தர்கள் 4 நாடுகளில் மேற்கொண்ட உத்தியோகப்பூர்வ பயணங்கள் தொடர்பான சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் அறிக்கை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அவ் அறிக்கை முன்வைக்கப்பட வேண்டிய விதம் மற்றும் முன்வைக்கப்பட வேண்டிய எல்லை தொடர்பாக அனைத்து பிரிவுகளுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென. | வெளிநாட்டு பயணங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஆலாசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பெப்ரவரி மாதத்தில் 6 மற்றும் 7 இரு நாட்கள் தாய்லாந்து பாங்கொங்கில் நடைப்பெற்ற நிகழ்ச்சிக்கு அமைச்சிற்காக பங்கேற்ற உத்தியோகத்தருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தங்குமிடம் மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கு குறிக்கப்பட்டிருந்ததுடன் படிக்கூலியாக அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட 120 அ.டொ செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 105 அ.டொ முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள 105 அ.டொ ஆன பணத்தொகை மீள அறவிடப்படுவதற்காக அவ் உத்தியோகத்தருக்கு 2021.08.18 திகதிய கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகப்பூர்வ பயணத்திற்காக வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மட்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

### 3.1 திட்டமிடல்

------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அமைச்சினால் மீளாய்வாண்டிற்காக, பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.1 பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கு அமைவாக விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரித்தல் முதல் 04 மாதங்களுக்காக மட்டும் கொள்வனவு செய்தல் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதெனவும் ஏனைய மாதங்களுக்காக கொள்வனவு தொடர்பான நிரந்தரத்தன்மை இல்லாமை பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லையென. | பெறுகை வழினக்காட்டி கோவையின் பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பெறகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 82,650 பெறுமதியான குளிர்சாதனம் மற்றும் குரல் பதிப்பி உபகரணம் நிலையான சொத்து பதிவேடிற்கு உள்ளடக்கப்பட்டிராததுடன் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ-6 மாதிரியில் நிலையான சொத்து பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டிராததுடன் மேற்கூறப்பட்ட சொத்து அம் மாதிரியிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட முடியாதுபோனது. | மீளாய்வாய்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 82,650 பெறுமதியான குளிர்சாதனம் மற்றும் குரல் பதிப்பி உபகரணம் சொத்து பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமை மற்றும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் BOS அறிக்கைக்கு 2021 ஏப்ரல் மாதத்தில் உள்ளடக்கப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளதென. | சொத்து அறிக்கைக்குட்படுத்தப்படும் போது ஏற்பட்டுள்ள குறைப்பாடுகள் விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதி பிரமாணம் 315 மற்றும் 880 பிரகாரம் அரசாங்க பணம் என்பவற்றின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக குறித்த உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்படுகின்றமை பார்த்துக்கொள்ளல் மற்றும் பிணை வைக்கப்பட வேண்டிய அமைச்சு உத்தியோகத்தர்களினால் குறித்த பிணை பணம் வைப்பு செய்யப்படாமை தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 09 ஆம் பந்திகளுக்கும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 880 பிரகாரம் வைப்பு செய்யப்பட வேண்டிய அமைச்சு உத்தியோகத்தர்கள் யாரென கற்று வருகின்றதுடன் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பிணை வைப்புக்கள் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதென. | நிதி பிரமாணம் ஏற்பாடுகள் பிரகாரம் தாமதமின்றி வைப்பு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| உத்தியோகப்பூர்வ பயணத்திற்காக வெளிநாடு செல்கின்ற உத்தியோகத்தர்களினால் தமது பயணம் நிறைவு செய்து வந்ததன் பின்னர் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பயன்படுத்தி வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையின் மேம்பாட்டிற்காக தேவையான கொள்கை, வேலைத்திட்டங்கள் தயாரிப்பதற்கு அல்லது அந் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் செயற்படுத்தப்படல் தொடர்பாக பின்னூட்டல் மேற்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று அமைச்சியால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளின் முன்மொழிவுகள், துறையின் மேம்பாட்டிற்காக தேவையான கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிப்பதற்கும் அந் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் செயற்படுத்தல் தொடர்பாக, பின்னூட்டல் மேற்கொள்வதற்கு வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுவதற்குரிய பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அப் பிரிவு தலைவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென. | அமைச்சினால் உத்தியோகப்பூர்வ பயணங்களுக்காக செலவு செய்கின்ற பணத்திற்கு பொருந்தும் நலன் பெற்றுக் கொள்வதற்கு கூடியவகையில் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 4 நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் உள்ளடங்கலாக 3 உத்தியோகத்தர்களுக்காக அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 2,085,245 செலவிடப்பட்டிருந்தது. அவ் அலகின் ஊடாக ஆண்டினுள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 15 கணக்காய்வு வேலைத்திட்டங்களில் 09 செயற்படுத்தப்பட்டிராததுடன் போதுமான கணக்காய்வொன்று மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிற்கடமை அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளரொருவர் இணைக்கப்பட்டு ஆண்டினுள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 06 கணக்காய்வு வேலைத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கொவிட் தொற்று காரணத்தினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டங்கள் மேற்கொள்வதற்கு தடையாகவிருந்தது. | தகுதிப் பெற்ற கணக்காய்வாளரொருவர் மற்றும் பதவியணியொன்று நிரந்தரமாக இணைக்கப்பட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாடு அமைப்பு தொடர்ச்சியாக மீளாய்விற்கு உட்படும் வகையில் உள்ளக கணக்காய்வு அலகு வலுவாக பேணிச் செல்லல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாரான பதவியணி முறையாக 1069 மற்றும் 997 ஆக காணப்பட்டதுடன் 72 வெற்றிடங்கள் காணப்பட்டன. 11 நிறைவேற்று நிலை பதவிகளில் 03 வெற்றிடங்களாக காணப்பட்டன. | நிறைவேற்று நிலையில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் இரண்டாம் நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடமும் தற்போது நிரப்பப்பட்டு வருகின்றது என. | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |